உ
சிவமயம்



நீராவியடி யாழ்ப்பாணம்

திருமதி சிவபாக்கியம் சிவசம்பு

அவர்களின்

# நினைவு மலர்

1976

உ
சிவமயம்



# திருமதி சிவபாக்கியம் சிவசம்பு

தோற்றம்: 22-4-1908 மறைவு: 1-5-1976

உ

சிவமயம்

## வெண்பா

சீர்கொள் நளவருடஞ் சித்திரை மாமதியி
ஓர்பத்தோ டொன்பானுள் ஒண்துதியை — பூர்வத்தில்
சேர்ந்தாள் சிவன்தாள் சிவபாக் கியஅம்மை
நேர்ந்தோர் புவிவாழ்வை நீத்து.

## ஆசிரியப்பா

அமிர்தினு மினிய தமிழ்மணங் கமழும்
ஈழவள நாட்டின் எழிற்சிர மெனத்தகும்
யாழ்நக ரதனிடை யேழ்நிலம் புகழும்
நல்லோர் மல்கிய மல்லா கத்தினில்
தாமுயர் செம்மல் பரராச சேகரன
வழியினில் தோன்றிய தொழிலினி லுயர்ந்த
விதானையா ராகியோன் உதார குணத்தினன்
சின்னத் தம்பியென் றோதும் சீரியோன்
எழில்மகள் இளைய பிள்ளையை இயைபுற
கௌதா ரிமுனை விதானையா ராகிய
வீறுசால் மரபினன் வித்தகன் விருந்தினன்
குணக்குன் றாகிய கணபதிப் பிள்ளையின்
மாரிநிகர் மகனும் வாரித் தம்பியவர்
வதுவை யயர்ந்து வாழ்க்கை நடத்துழி
நாரியர் திலகம் நாற்குணம் நிறைந்தவள்;
குலக்கொடி குணவதி குலவிய அருந்ததி
இலக்கணம் நிறைந்த எழிலார் மடந்தை
பவநெறி யணுகாச் சிவநெறிச் செலவினள்;
ஆகிய பெண்மகள் தோன்றின ளவர்க்கு
தெய்வ அருளால் எய்திய செல்வமென்
றெண்ணின ராதலின் கண்ணிகர் மகட்டுச்
சிவபாக் கியமெனச் சிறப்புறு பெயர்வைத்
தழைத்தன ரப்பெய ரதனா லவர்தான்
செல்வமாய் வளர்ந்து மல்கு கலைபயின்று
யாவரும் வியப்புறும் வாலிப மடைந்துழி

தன்னலம் கருதாத் தண்ணளி படைத்த
பன்னருஞ் சிறப்பேற் பொன்னம் பலம்மகன்
கல்வியில் உயர்ந்தோன் காண்பதற் கெளியோன்
செல்வம் நிறைந்த சீர்சால் வள்ளல்
குலங்குடி யொழுக்கம் நிலமிசை நிகரிலான்
தூயவாழ் வாளான் தியாக ராஜாவை
அங்கிசான் ருக அருமண முடித்து
இல்லற மாகிய நல்லற மியற்றுநாள்
அறிவறி மக்களைப் பெறுவதே செல்வமென்
றோதிய புலவனின் உயர்மொழிக் கிலக்காய்
அருமருந் தனைய பொருவரும் மகப்பே
றடைந்தனர் குறைவக ளகன்றிட அவர்தாம்
பத்தி யுடையவள் பண்புக ளமைந்தவள் ;
உத்தமி பெண்களுக் குயர்பெருந் திலகம்
நித்தியச் செல்வி சத்தியந் தவறாள் ;
சத்திய லட்சுமி எனும்பெய ராட்டி
அடலே றனைய நடையினை யுடையவன்
எடுத்த காரியம் தொகுத்து முடிப்பவன்
பெரியோர் தோழமை உரியோ னாகிய
வர்த்தகத் தொழிலாளர் மத்தியில் உயர்ந்தோன்
நடராஜாவெனும் நாவலன் றன்னை
கணவனாக் கொண்ட கற்பின் செல்வியை
மகளாய்க் கொண்ட மாதவம் படைத்தவன் ;
மயிலன சாயலள் அயில்நிகர் விழியினள்
ஜெயகௌரி யென்னும் உயர்குண மடந்தை
வர்த்தகத் துறையில் வித்தக னாகிய
ஐபாத் துரையெனும் செய்யவன் மனையாள்
இறுதிப் பொழுதிலு மருமருந் துதவிகள்
பலபல புரிந்த பண்புள மடந்தையை
கீர்த்தி மிகுந்திடப் பேர்த்தியாய்க் கொண்டவள் ;
அன்னவன் தங்கையாய் மன்னிய மாது
அமுதஞ் சுரக்கும் அரும்மொழி யாட்டி
யமுன ஸ்ரீகௌரி எனுமோர் பெயரினள்
புஷ்பம் நிகர்த்த பொலிவள முத்தன்
புஷ்ப நாதனின் புகழ்மிகு மனைவி
பொற்பு மிகுந்த கற்பினை யுடையவள்
இவள்தனை யிரண்டாம் பேர்த்தியாய்க் கொண்டவள் ;

அந்தமில் கீர்த்தி நந்தாச் செம்மல்
புந்தி மிகுந்தோன் கந்த னருளால்
வந்தவ தரித்த செந்தில் குமாரை
மூத்த பேரனாய்க் கீர்த்தியாய்க் கண்டவள் ;
கணிதத் துறையில் கற்கும் மாணவன்
அணிபெற அமைந்த அருள்நெறி யாளன்
இதயம் நிறைந்த உதய குமாரை
அடுத்த பேரனாய் அடைந்து மகிழ்ந்தவள் ;
கணக்கா ளராகிய குணக்குன் றனையாள்
நிலாவினை நிகர்த்த நிகரிலா நங்கை
உஷாகுமா ரியெனு முத்தமி யாளை
இளைய பேர்த்தியாய் இதமுற ஏற்றவள் ;
ஏவா மகனும் மூளாய் நாட்டினி
லுயர்தொழி லாளன் ஐயாத் துரைக்கும்
உயர்முதற் பேர்த்தி ஜெய கௌரிக்கும்
மக்களாய்த் தோன்றியோர் மாண்புற நால்வர்
வித்தைகள் மிகுந்தவள் விதம்வித மான
புத்திகள் புகட்டும் சித்திராங்கி யுடன்
கரும வீரன் கலைகளில் வல்லோன்
தருமம் தழைத்த தரும ராஜனும்
உத்தமி யாகிய உமாமகேஸ் வரியும்
இறக்கும் வேளையில் இணைந்தரு கிருந்தே
துறக்கும் காட்சியைத் துயரொடு கண்ட
அருமை மைந்தன் நிர்மலனு மாகிய
நால்வர் தம்மையும் நானில் மதனிடை
பூட்டியர் பூட்டராய்க் கண்ட புனிதை.
அறிவும் ஆண்மையும் அயரா உழைப்பும்
உயர்குணம் யாவும் உறுதியாய்க் கொண்டவன்
வள்ளுவ ருரைத்த வாய்மொழிக் கிலக்காய்ப்
பெண்குணம் யாவும் பெட்புற வமைந்த
வன்னமா மயிலாம் அன்ன பாக்கியப்
பெண்மணி தன்னைக் கண்ணிய மனைவியாய்க்
பெற்ற பெரும்பே றுற்ற செல்வன்
பெயர்தனக் கேற்ற பெருங்குணம் படைத்தோன்
ரீசீ ஒவில் வேர்க்ஸ் சுப்பலவச ராய
சற்குணம் என்னும் நற்பெய ரோனை
மைந்த னாகப் பெற்றபே றுடையவள் ;

கலை பயில் கழகத் துயர்பெருங் கழகமாம்
யாழ்நக ரிந்துக் கல்லூரி தன்னில்
தனித்துயர் மாணவன் சுமித்திரன் தன்னையும்
அமைதியும் அடக்கமு மமைவுற அமைந்த
தூய உளத்தளாம் துஷ்யந்தி தன்னையும்
கந்த னருளால் வந்தவ தரித்த
நந்தாச் செல்வன் செந்தூரன் தன்னையும்
நன்மகா ராகக் கண்டனர் சற்குணம்
இன்ன மூவரையும் தன்மகன் வழிவரும்
பேர ராகக் கண்ட பெண்மணி ;
ஒழிற் பகுதியில் உயர்தொழில் புரிந்து
ஆண்டு முப் பத்தொன் றிலார்புவி நீத்து
புகழுடம் பீங்குறப் புகலிட மடைந்த
மயில்வா கனத்தை மகனாய்க் கொண்டவள் ;
வாழ்வெனும் படகில் வளமுற உலவுநாள்
காலன் என்னும் சுழல்பெருஞ் சூறை
வீசி மோதி மோசம் விளைத்திட
கணவனை யிழந்து துணைக ளிழந்து
அலமரும் கலமெனச் சுழல்வுறு காலை
மக்கள் துயர்க்கு மனம்பொறுக் காமல்
சிந்தை நொந்து மைந்தரை வளர்க்க
ஒருவழி காணு உத்தமி அவர்க்காய்
மறுமண மியைந்து மாட்சிமை மிகுந்த
மதிநிர் மாண்பினன் கதிரிப் பிள்ளைதன்
மகனு யுதித்த மதிமிகு புரவலன்
அன்பும் அறனும் நன்குடை யாளன
சிவசம்பு என்னும் தவவாழ் வுடையனை
விதியது கூட்ட வேதனை யகன்று
திருமணம் புரிந்து பெருவாழ் வடைந்து
யாவரும் ஒன்றுப் தேவரும் வியக்க
இல்லறச் சகடஞ் செலுத்தி னரந்நாள்
மாசறு மணியாய் வலம்புரி முத்தாய்
தேசுற விளங்கிய திருவினை நிகர்த்த
ஒருபெரும் பெண்மக வுதித்தன ளுவப்ப
இராச லக்குமி எனப்பெய ரிட்டு
நேசம் நிறைய நிறைவுடன் வளர்த்து
மங்கைப் பருவம் மணுகிய காலை

மணமுடித் தவர்க்கு மதிப்புக லளித்தனர்
அவ்விளம் மகட்கு அருமைக் குழந்தைகள்
இருவர் தோன்றினர் இறைதிரு வருளால்
தவத்தொழி லன்றிப் பவத்தொழில் புரியாள் ;
சிவனடி யன்றிப் பிறரடி நினையாள்
அன்னதற் கிணங்க அவடனக் கொருபெயர்
சிவகௌரி என்று நவமாய் வைத்தனர்
அடுத்து வருமகட் கிதமுறு பெயராய்
சுபத்திரா வென்று நிகழ்த்தினர் நினைத்து
இன்னவ ரிருவரை மன்னிய துணிசேர்
பேத்தி மாராக ஏற்று மகிழ்ந்தனன் ;
இராச லக்ஷுமி யிளைய சோதரி
கெங்கா தேவி வளர்ந்த காலை
பண்ணைச் சங்கத்தில் பகர்வரும் மனேஜர்
கண்ணைக் கவரும் கவர்ச்சி மிகுந்தோன்
இந்திரன் அனைய சுந்தரம் மிகுந்த
சந்திர போஸை சகலரும் விரும்ப
வதுவை இயற்றி இதமுற வாழுநாள்
அன்னவ ரிருவர்க்கு மருமகா ராகி
புவியினிற் றோன்றிய புனித மக்கள்
மாமதி யனையராய் நீதிக ணிறைந்த
மாஜோதி என்ற மங்கையர் திலகமும்
வசீகர தோற்றமும் இராசத குணமும்
மகிதலத் துயர்ந்த மஜீரத நம்பியும்
மூதிரா வாழ்க்கைப் பபிதா தானும்
பேரன் பேர்த்தி ளாகிடப் பெற்றவன் ;
உடன்பிறந் துடன்வளர்ந் துயர்துணை யாகி
மலாயா நாட்டினில் மாதொழில் புரிந்து
மலேசிய சினிமா மன்னிய பகுதியில்
உதவி யதிபதி உத்தியோ கத்தராய்
சதாதொழில் புரிந்திடும் சதாசிவத் தண்ணலின்
உற்ற சோதரி யாகி யுதித்தவள் ;
அன்னவர் தமரும் பன்னிய ராகிய
அலகில் புகழ்நிறை திலக வதியிடம்
தோன்றிய மகாராசம் தேவலா நாவின்
மாலா என்னும் மணிநிகர் மங்கையும்
நிலமிசைப் பிறந்த நிலேந்திர னாகிய

புலேந்திர னென்று புகன்றிடு புதல்வனும்
ராகினி என்னு மெழில்பெறு நங்கையும்
அவிர்மதி யனைய ரவியெனும் நம்பியும்
கலாநிதி யாகிய விலாசினி நங்கையும்
மருமகா ராகிட மாதவம் புரிந்தவள் ;
இத்தனை சுற்றமும் இயைபுற வாழ்ந்து
மாநில வாழ்வினில் தேன்நில வனைய
மாபெரும் வாழ்வு மாண்புற வாழ்ந்து
தோன்றிற் புகழொடு தோன்று வென்ற
ஆன்றநூ லாசிரியன் பொன்மொழிக் கிலக்காய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து களித்துத்
தெய்வத்து ளொன்ருய்த் திகழ்ந்திட விரும்பி
மாநில வாழ்வு மாயமென் றுய்ந்து
மேநில வாழ்வு மிக்கதென் றுணர்ந்து
உற்றார் உறவினர் உளருதரும் தோழியர்
கற்றர் மற்றர் கவலைக ளடைந்திட
நல்லவ ரென்றே நானில மேத்திட
வல்லவ ரென்றே அல்லவர் சொல்லிட
நல்வாழ் வியற்றி நாவலந் தத்தினில்
சித்திரை மதியின் சேர்ந்த பூர்வத்தில்
நற்றுதியைய கூடிய நல்வேளை தன்னில்
அரனடி சேர்ந்து பரகதி யடைந்தனர்.
அளிதே தானே அளிதே தானே
புவியினில் வாழ்க்கை புகன்றிடி லெவர்க்கும்
அளிதே தானே அளிதே தானே.

## மக்கள் புலம்பல்

### வெண்பா

நெஞ்சம் பதைக்கும் நினைக்கவுடல் சோர்வடையும்
துஞ்சுங்கண் ணுறக்கம் துளித்திடும் — அஞ்சொல்
தளதளக்கும் அம்மா தவித்திரங்கு மெங்கள்
உளமதற்கு முண்டோ துணை. 1

அன்னம் தரவுண்டோ ஆறுதல் சொல்லவுண்டோ
இன்னல் அகற்றவினி யாருண்டோ — இன்னமுதம்
பேச்சுண்டோ அம்மா பிரிந்திருக்கு மெங்களுக்கு
ஏச்சொன்றே இங்குண்டு தேர். 2

உன்முகத்தை யுன்சிரிப்பை யுன்மொழியை யுன்னழகை
உன்னுணவைக் காண வுளந்துடிக்கு -- மென்னம்மா
வாடிநிற்கு மக்கள் வருத்தத்தை நீகண்டால்
ஓடிவந்து தீர்க்காயோ உற்று. 3

கையாற் பிடித்தணைத்துக் கால்மீ திருத்திவைத்து
நையா தெமக்குரைத்த நற்கல்வி --- ஐயோ
மறக்க முடியவில்லை மாநிலத்தில் நீதா
னிறக்கப் பொறுப்போமோ இன்று. 4

அப்பா எமைத்தொடர்ந்து ஆசைக் கடிக்கவந்தால்
அப்போ தகன்றோடி அம்மாவே --- தப்ப
உன்னைச்சுற்றிப் பற்றிநின்று உள்ளகுறை சொன்னோம்
நினைக்கப் பதறிடுமே நெஞ்சு. 5

## மகன் புலம்பல்

வாமகனே யென்றுரைத்து வாரி அணைத்தெடுத்து
பார்மகனே யென்றென்னைப் பாராட்டி --- பூமகனே
கண்ணே மணியே கரும்பே யெனவுரைத்த
பண்ணோ தனியின்பம் பார். 6

வடிவாக என்னை வயோதிகத்திற் காத்துக்
கடிதாக என்குறைகள் கண்டால் --- நெடிதோடி
தீர்ப்பான் மகனென்று தேக்கும் மகிழ்ச்சியுடன்
காப்பா யிருந்தாய் களித்து. 7

## பேரர் புலம்பல்

### விருத்தம்

சீராரும் பேரரெமைச் சிறகணைத்துச் சிந்தைதனி லன்பு தேக்கி
ஆராத காதலொடு மள்ளிமுத்த மளித்துச்செல் வங்கள் பேசித்
தீராத சுவையுடைய தின்பண்ட மினமினமாய் தின்னத் தந்து
பேரான பலகதைகள் பிழிந்தெடுத்த ரசமென்னப் பேசு வாயே. 1

பாங்காக வுன்மடியிற் படுத்துறங்கும் வேளைகளில் கதையைத் தானே
நீங்காத துயரங்கள் நீக்கியெமை மகிழ்வித்த நிலையைத் தானே
தீங்கான மிசைத்திடையே நித்திரைகள் கொளவைத்த திறனைத் தானே
சாங்காலம் நினைத்திரங்கிச் சகித்திருக்க லாற்றுது சந்தோ மந்தோ. 2

அங்கமெலாம் நொந்துநொந் தழுதழுது சோர்கின்ற வருமைப் பாட்டி
செங்கரங்கள் நீட்டர்த செய்கையொரு புதுமையான செயலே யன்றோ
இங்கிதமா யெமைவளர்த் திடைநடுவே நீத்தகல இதய மென்னே
பங்கமுற்ற கல்லோதான் பாரதனி லெந்துபரம் பகர லாமோ. 3

செஞ்சாந்துப் பொட்டணிந்து சிங்காரப் பட்டுடுத்திச் சிறப்பினோடு
விருந்துவந்தோர் பேர்காள் வேண்டுவது மென்னென்ன விளம்பு மென்றாய்
நெஞ்சார வின்மொழிகள் நெகிழ்ந்துருகிற் றார்ப்பரித்து நிமிர்ந்து நின்றோம்
துஞ்சாமற் றுஞ்சினையோ தொலைவினைப் பயன்றானோ துகள்தீர் பாட்டீ. 4

## மருமக்கள் புலம்பல்

### கொச்சகம்

சோருதே யெம்முடலம் சொரியுதே கண்ணருவி
ஊருதே கல்நெஞ்சம் எரியுதே யெவ்வயிறு
கூறுதே வாயோலம் குலையுதே மூளைநிலை
மாறுமோ மாமிநின்றன் மருமக்கள் மால்நினைவே. 1

மன்றல் மணப்பந்தர் மணம்முடித்த நாள்முதலாய்
என்றும் உறுதுணையர் யெதிர்வார்த்தை சொல்லாமல்
பொன்றும் வரையிருந்தே புத்திமதி தந்தளித்த
நன்றி தமக்கெங்கள் கைம்மாறு தாமெதுவோ. 2

மாமி மருமக்கள் மன்னியுள நாட்டொடங்கி
பூமி முழுவதிலும் பொருத்தங்கள் கண்டிலமால்
மாமி சினந்தொருகால் மருமக்கள் மனமுடைந்தோ 3
பூமி தனிலையால் பிரிவேதும் பொருந்திலமே.

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

### ஆசிரிய விருத்தம்

தேடிவரும் இனத்தவர்க்கு யாது சொல்வோம்
திருவுடைய மக்களொடு பேரரெல்லாம்
ஓடிவரும் போதென்ன பதிலு ரைப்போம்
உன்மருகர் மாமியெங் கெனியோ நாங்கள்
நாடியென்ன பதிலுரைப்போம் கலன்பா ராமல்
நற்குடும்பம் யாவருக்கும் நலமே செய்து
வாடிநிற்கும் பூட்டர்தாம் பயன்கொள் ளாமல்
வருந்திநிற்கத் துஞ்சினையே வறிதே யன்றோ. 1

பொன்மடியி லிருத்திமன மகிழ்வு பொங்கப்
பூரிக்கும் மழலைதன்னால் அழைத்து நம்மை
இன்முகத்தாற் கொஞ்சுமொழி புகலும் பூட்டி
இனியென்று நின்குரலை இனிது கேட்டோம்
அன்புடனீ தழுவிநின்று உணவு மீந்து
ஆசையுடன் பார்ப்பதனைக் காண்ப தெப்போ
தன்பருவந் தனில்பூட்டர் தமைக்கண் டிட்டும்
தனிமகிழ்வு பொருந்தினையே தகைமை தானே.

## தேற்றம்
### கட்டளைக் கலித்துறை

நெருந விருந்தவ னின்றில்லை யென்றிடு நீர்மைகெட்ட
பெருமை படைத்தது பேருல கென்னுமிப் பீடுகண்டு
ஒருபுள் குடம்பை யொருவிப் பறத்தலை யொப்பதுதான்
மருவு முடலுயிர் வாழ்வென மாழாது தேறுதிரே.



உ

சிவமயம்

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடியே போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்விளங் கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்

செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயாஎன ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த நன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

பிரகாச அச்சகம்,
16, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.